# ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை –600 006

## <u>பத்திரிக்கைச் செய்தி</u>

ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் சிறப்பாசிரியர் பணியிடங்களுக்கான நேரடி பணித்தெரிவிற்கான போட்டி எழுத்துத் தேர்வு 23.09.2017 அன்று நடத்தப்பட்டு விண்ணப்பித்த 37952 நபர்களில் 35781 விண்ணப்பதாரர்கள் தேர்வு எழுதினார்கள்.

வினாத்தாட்கள் மதிப்பீடு செய்யப்பட்டு ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் மதிப்பெண்கள் 14.06.2018 அன்று வெளியிடப்பட்டது.

தேர்வு எழுதிய பின்னர் தேர்வர்களுக்கு OMR விடைத்தாளின் நகல் தேர்வுக்கூட அறையிலேயே வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் தற்போது தேர்வர்களிடமிருந்து மதிப்பீடு செய்யப்பட்ட OMR விடைத்தாளின் நகலினை பார்வையிட கோரிக்கை பெறப்படுவதால் OMR விடைத்தாளின் நகலினை நேரில் பார்வையிட விரும்பும் தேர்வர்கள் சென்னை – 6, நுங்கம்பாக்கம், கல்லூரி சாலையில் உள்ள ஆசிரியர் தேர்வு வாரிய தகவல் மையத்தில் அவர்களின் பதிவெண் மற்றும் பிறந்த தேதி ஆகியவற்றை உள்ளீடு செய்து தேர்வு எழுதிய அசல் OMR விடைத்தாளின் நகலினை (Scanned Image) கணினி திரையில் 18.06.2018 முதல் காணலாம்.

சென்னை –600 006 — தலைவர்

நாள் 15.06.2018